**<u>அமர் சேவா சங்கம், ஆய்க்குடி</u>**

**<u>தலைவர் அறிக்கை</u>**

**2017-2018**

பேரன்புடையீர்.

நமஸ்காரம். வாழ்க வளமுடன், வாழ்க வையகம்.

1993 ஜுலை 24 அன்று, அமர் சேவா சங்கத்திற்கு வருகை தந்து, சுவாமி சிவானந்தா பிளாக்-ஐ திறந்து வைத்து, சங்கம் தனித்துவத்தோடு செயல்பட தீர்க்க தரிசனத்துடன் ஆசி வழங்கிய நமது முதல் Patron-in-Chief பாரத ரத்னா Dr.C.சுப்ரமணியம் அவர்கள், 1993ம் ஆண்டு செப்டம்பர் மாத Bhavan's Journal இதழில் "Human Wonder" என சங்கத்தைப் பாராட்டியதைப் போற்றி நினைவு கூர்வோமாக.

நமது Patron-in-Chief Dr.M.S.சுவாமிநாதன் அவர்கள் நமது Patrons திரு.N.வாகுல் மற்றும் திரு.S.V.மோனி அவர்கள் நல்லாசிகளுடன் நமது செயல்பாடுகள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

30/5/2018 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சிதலைவராகப் பொறுப்பேற்று கொண்ட திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் IAS அவர்களை அடியேனும், சங்கச் செயலாளர் திரு.S.சங்கரராமனும் நேரில் சந்தித்து சங்கச் செயல்பாடுகளை விளக்கி, சங்கத்தின் அறிவுரைக்குழுவின் Ex-Officio Chair Person என்ற முறையில் அறிவுரைக்குழு கூட்டத்தைத் தலைமையேற்று நடத்திதரவும், சங்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிடவும் அழைப்புவிடுத்தோம். ஜுலை 7ஆம் தேதி கூட்டத்தை நடத்த அனுமதிகொடுத்தமைக்கு சங்கத்தின் குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள், பணிபுரியும் சகோதர, சகோதரிகள் மற்றும் நமது சேவையை பயன்படுத்திக்கொள்வோர், செயற்குழு, பொதுக்குழு மற்றும் அறிவுரைக்குழு உறுப்பினர்கள் சார்பில் மனமார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கின்றோம். பல்வேறு அவசர பணிகளுக்கு இடையே அன்றைய தினம் இரண்டு மணி நேரம் செலவிட்டு சங்கத்தை சுற்றிப் பார்த்து அறிவுரைக்குழுக் கூட்டத்திற்கு தலைமையேற்று நிதானமாக நமது செயல்பாடுகளையும், சேவைகளையும் கேட்டறிந்து கொண்டார். பிஸியோதெரபி Occupational Theraphy, நர்சிங் போன்ற பயிற்சிகளை வழங்கிட கல்லூரி ஆரம்பிக்க சங்க நிர்வாகிகளும் மறுவாழ்வுத்துறையில் பணிபுரியும் அன்பர்களும் திட்டமிட்டுள்ளனர் எனவும், அதற்கு 25 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது எனவும் மாவட்ட ஆட்சியரிடம் தெரிவிக்கப்பட்டது. இக்கோரிக்கையை மனுவாக மாவட்ட நிர்வாகத்திற்கு அளிக்குமாறும், அதை பரிசீலிப்பதாகவும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்கள். மாவட்ட நிர்வாகமும் சென்னை We are your Voice அமைப்பும் இணைந்து நடத்தும் மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு நேர்காணும் முகாம் திருநெல்வேலி சதக் அப்துல்லா கல்லூரி வளாகத்தில் வைத்து 29-7-2018 அன்று நடக்கவிருப்பதையும் தெரிவித்தார். ஆய்க்குடி தென்காசி சாலையில் அமைந்துள்ள டாஸ்மார்க் கடையை அப்புறப்படுத்துவது சம்பந்தமான நமது கருத்தை உடனடியாக ஏற்றுக் கொண்டு தென்காசி கோட்டாட்சியரிடம் உடனடி கவனம் செலுத்த அறிவுறுத்தினார். நமது சிவசரஸ்வதி வித்யாலயா ஆரம்பப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் தமிழக அரசின் மதிய சத்துணவு திட்டம் அமல்படுத்தப்படவேண்டும் என்ற கருத்தையும் பொறுமையாக கேட்டறிந்து கோரிக்கையை மனுவாக அளிக்கும்படி நமது பள்ளி தாளாளரிடம் தெரிவித்தார்.

நம்முடன் 2017 ஜுன் முதல் வாரம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்று ஓராண்டு நமது நெல்லை மாவட்ட ஆட்சித்தலைவராகப் பணியாற்றிய திரு.சந்தீப் நந்தூரி IAS, அவர்களை நாம் அடிக்கடி சந்தித்து நமது சங்கத்தின் செயல்பாடுகளைத் தெரிவித்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும்

பெற்றுவந்தோம். நம்முடைய இனிய அழைப்பினை ஏற்று 27-8-2017 அன்று சங்கத்திற்கு முதன்முறையாக விஜயம் செய்தார். அவ்வமயம் நாம் ஏற்பாடு செய்திருந்த தேசிய கருத்தரங்கில் மாவட்ட ஆட்சியர், RCI and National Trust Chairmanம் Disabilityக்கான Central Chief Commissioner மான திரு. கமலேஷ் குமார் பாண்டே, IGNOU Trivandrum Regional Director, Dr.B.Sukumar, Mr.Sundara Lakshmanan, National Convener, Rashtriya Sewa Bharati, Bhuvaneshwar, Mr.Namdeo Kadam, A.G.M. (CSR & HR), G.I.C.I., Mumbai. முத்துகாடு NIEPMD அன்பர்கள் திரு. K.பாலபாஸ்கர் திரு. தேவேந்திர பிரசாத் மற்றும் சென்னை திருமதி. மீனாட்சி, ஸ்மிதா போன்றோர் பங்கேற்றனர். மாவட்ட ஆட்சியரிடம் நமது சுயஉதவிக்குழுக்கள் கூட்டமைப்பின் சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று Monday Petition நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வண்ணம் காலை 10.30 to 11.00 மணி வரை மாற்றுத்திறனாளிகளுக்கான நேரமாக ஒதுக்கீடுசெய்தது அனைவராலும் வரவேற்க்கப்பட்டது. அதே போல் குடிநீர்ப் பிரச்சனையை ஓரளவு சமன் செய்ய அடவிநயினார் அணைக்கட்டிலிருந்து அனுமன் நதியில் தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்ததும், “அன்பு சுவர்” திட்டத்தை திருநெல்வேலியில் அறிமுகப்படுத்தியதும் பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. சங்கத்திற்கு சில வாரங்களாக தடைபட்டிருந்த தாமிரபரணி குடிதண்ணீர் உடனடியாக கிடைக்க ஏற்பாடு செய்ததை நாம் நன்றியோடு நினைவுகூறக் கடமைப்பட்டுள்ளோம். தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றுள்ள அன்னாரது பணிகள் சிறக்க வாழ்த்துவோமாக. ஆண்டவனை வேண்டுவோமாக.

நமது முன்னாள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், நமது அறிவுரைக்குழுவின் Ex-Officio Chairman-னுமான Dr.M.கருணாகரன் I.A.S., Joint Secretary Agriculture Dept., பல சந்தர்ப்பங்களில் சங்கத்திற்கு வேண்டிய உதவிகளை நல்கி வந்தார். அவர் 2013-2014 ஆம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சித்தலைவரின் விருப்புரிமை மானியத்திலிருந்து வழங்கிய Battery operated four wheeler vehicle சங்கத்திலுள்ள மாற்றுத்திறனாளி அன்பர்களுக்கும், சங்கத்தைப் பார்வையிட வருகைபுரியும் மூத்தகுடி மக்கள் மற்றும் அதிக தூரம் நடக்க இயலாதவர்களுக்கும் பயனுள்ளதாக இருந்துவருகிறது.

நெல்லை மாவட்டத்தின் முன்னாள் ஆட்சித் தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளுக்கான முன்னாள் ஆணையரும், நமது அறிவுரைக்குழுவின் முன்னாள் Ex-Officio Chairman-னுமான திரு.V.K.ஜெயக்கொடி I.A.S., Commissioner, Vigilance Dept., அவர்களை நாம் அவ்வப்போது சென்னையில் சந்தித்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் பெற்று வருகிறோம்.

Advisory Board–ன் முதல் Ex-Officio Chairman-னும் திருநெல்வேலி மாவட்டத்தின் முன்னாள் ஆட்சித் தலைவரும், மத்திய அரசின் முன்னாள் இரயில்வே இணை அமைச்சருமான திரு.R.வேலு, I.A.S., அவர்களையும், அவரைத் தொடர்ந்து District Collector-ராகவும் நமது Ex-Officio Chairman-ஆகவும் செயல்பட்ட திரு.R.ஜெயராமன்.I.A.S., Dr.நிரஞ்சன் மார்டி I.A.S., திரு.K.தனவேல்.I.A.S. திரு.சுனில்பாலிவால்,I.A.S., திரு.அதுல் ஆனந்த்.. I.A.S., திரு.G.பிரகாஷ் I.A.S., திரு.R.பழனியாண்டி I.A.S., திரு.M.ஜெயராமன் I.A.S., Dr.R.செல்வராஜ்.I.A.S. போன்றோரையும் தேவைப்படும்போதெல்லாம் தொடர்பு கொண்டு வருகிறோம்.

பிரபல எழுத்தாளரும், சமூக ஆர்வலரும், தனது எழுத்தாற்றலால் அமர் சேவா சங்கத்தை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தியவருமான திருமதி.சிவசங்கரி, தற்போதைய "சுலோசனா கார்டன்ஸ்" வளாகம் உருவாவதற்கு நன்கொடை வழங்கியும், நிதி திரட்டியும் உதவிய மும்பை சமூக சேவகி திருமதி.சுலோசனா ஸ்ரீனிவாசன், பாரத ரத்னா C.சுப்ரமணியம் ஐயா அவர்களின் புதல்வரும், நமக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பவரும், National Agro Foundation Chairperson-னுமான Rtn.S.S.ராஜசேகர், பாரத ரத்னா C.சுப்ரமணியம் ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை தொகுத்துள்ளவரும், ஐயா பெயரில் கடந்த 14 ஆண்டுகளாக Endowment Donation-ஆக நமக்கு வருடந்தோறும் ரூபாய்.10,000/- அனுப்பி வருபவரும், மகாகவி சுப்பிரமணிய பாரதியார்பால் அதிக ஈடுபாடு கொண்டுள்ளவரும், பல பிரபல தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வருபவருமான Dr.K.S.சுப்பிரமணியன், 1990-1993-ஆம் ஆண்டுகளில் இந்தியக் கப்பற்படைத் தளபதியாகப் பணியாற்றியவரும், Jindal Trust Award-க்கு நமது பெயரைப் பரிந்துரைத்தவரும், 2004-ஆம் ஆண்டிற்கான Magsaysay Award Recipient-மான Admiral L.ராம்தாஸ், நமது சங்கத்தின் மறுவாழ்வுத் துறை உருவாவதற்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவரும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை Physical Medicine and Rehabilitation Department தலைமை மருத்துவராகப் பணியாற்றி, பின்னர் சென்னை K.K.நகர் Regional Rehabilitation Training Centre-ன் Director-ஆகப் பணியாற்றியவருமான Dr.S.ராமர், தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத்திறனாளர் நல்வாழ்வுச் சங்கத்தின் நிறுவனத் தலைவரான திரு.T.A.P.வரதக்குட்டி, சங்கம் ஆரம்பித்த நாட்களிலிருந்தே நம்மை வழிநடத்தி, Polio Immunisation, Measles Immunisation முகாம்களில் நம்மையும் பங்கேற்கச் செய்து For the sake of Honour Award வழங்கி பெருமைப்படுத்திய Rotary Club of Courtallam-ன் உறுப்பினர்களான Rtn.PDG.V.பாஸ்கரன் மற்றும் Rtn.P.P.S.ராமன், 1993-1996-ஆம் ஆண்டுகளில் தாய்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் வசிக்கும் உறவினர்கள், நண்பர்கள் மூலம் சங்கத்திற்கு நிதி திரட்டுவதைத் தனது தலையாயக் கடமையாகக் கொண்டிருந்தவரும் இளம் வயதிலேயே பார்வை இழக்க நேரிட்டாலும் தன்னம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்து பல சமூகப் பணிகளிலே தம்மை ஈடுபடுத்திக்கொண்டு பார் போற்றும் பெண்மணியாகத் திகழ்பவருமான திருமதி.கமலா ஐயர், Mumbai Sir Ratan Tata Trust மூலம் நமக்கு அறிமுகமானவரும் மதுரை Dhan Foundation நிறுவனருமான, எளிமையின் சிகரம் திரு.M.P.வாசிமலை, 2001-ஆம் ஆண்டில் பெங்களூரில் பல நல்ல உள்ளங்களையும், நிதி நிறுவனங்களையும், தொழிலதிபர்களையும் அறிமுகப்படுத்தி சங்கத்திற்கு நிதி திரட்டுவதில் முனைப்புடன் செயல்பட்ட பெங்களூர் திரு.S.நாராயணன், திரு.மணி நாராயணசாமி, 1995-ஆம் ஆண்டு நமது தொழிற்பயிற்சி மையங்கள் உருவாகக் காரணமாகத் திகழ்ந்த மும்பை திரு.S.R.S.ஐயர் Executive Director IDBI Retd., 1991-ஆம் ஆண்டிலிருந்து 1995-ஆம் ஆண்டு வரை Indian Bank சார்பில் நமக்குப் பல்வேறு உதவிகளை நல்கி வந்த இந்தியன் வங்கி முன்னாள் Chairman and Managing Director சென்னை திரு.M.கோபாலகிருஷ்ணன், பிரபல பல் மருத்துவர் சென்னை Dr.M.S.ரவி, நமது சங்கத்தின் Home சிறார்கள் பராமரிப்பிற்கும், கட்டடப் பணிகளுக்கும் முதன்

முதலாக 1991-ஆம் ஆண்டு அரசு மானியம் பெற வழிவகுத்த முன்னாள் மறுவாழ்வுத்துறை இயக்குநர் Dr.A.பிச்சை I.A.S, ஏகல் வித்யாலயா மற்றும் பல்வேறு சமூக, அறப்பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளவரும், சிறந்த தொழிலதிபரும், நமது Major Donor-ஆன சென்னை M/s.Tex Biosciences (P) Ltd., Managing Director, Ln.R.P.கிருஷ்ணமாச்சாரி, சிறந்த Rotarian-ம், நமது Major Donor-ஆன விசாகப்பட்டிணம் M/s.Modern Refractory Erectors நிறுவனா் Rtn.P.K.A.நாராயன், Ln.R.P.கிருஷ்ணமாச்சாரி அவா்கள் மூலம் அறிமுகமானவரும், தொழிலதிபரும், நமது Major Donor-ஆன M/s.Trio Trend Export Pvt.Ltd., Managing Director, Kolkotta திரு.முகுந்த் குல்கர்னி, அவ்வப்போது வேண்டிய உதவிகளை நல்கி வருகிற ஆய்க்குடிப் பஞ்சாயத்தின் சாா்பிலான Ex-Officio Member அவ்வப்போதைய பஞ்சாயத்துத் தலைவராவாா். நமது சங்கத்தின் நிதிநிலை சீராக அமைவதற்கு சில தொழில் நண்பா்களை அவ்வப்போது அறிமுகப்படுத்தி உதவி வருபவரும், Major Donor-ஆன சென்னை M/s. Mecheri Foundation Trustee-ம், தொழிலதிபருமான திரு.ராஜீவ் மேசேரி, மற்றும் HCI Canada-வின் தலைவா் திருமதி சுலோசனா கிருஷ்ணமூா்த்தி, 1991-ஆம் ஆண்டிலிருந்து சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகளை இலவசமாகத் தணிக்கை செய்து அறிவுரைகள் வழங்கி வரும் சென்னை M/s.M.Srinivasan & Associates Founder திரு.M.ஸ்ரீனிவாசன், Partner திரு.R.Mohan,நமது சுலோசனா காா்டன்ஸ் வளாகத்தில் 1990-ஆம் ஆண்டு கட்டட வேலை தொடங்கியதிலிருந்து 2008-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பல்வேறு கட்டடப் பணிகளையும் முன்னின்று மேற்கொண்ட சென்னை Er.V.ராமச்சந்திரன், சென்னை Freedom Trust மூலம் பல முகாம்களை நமது வளாகத்தில் நடத்தி உபகரணங்கள் வழங்கி வருகிற சிறந்த கா்நாடக இசைக் கலைஞரான Physical Rehabilitation Medicine மருத்துவா் Dr.S.சுந்தா்,ஆரம்பகாலத்திலிருந்தே சங்கத்தின் வளா்ச்சியில் அக்கறை காட்டி வருகிற நமது சட்ட ஆலோசகா் தென்காசி / மதுரை திரு.T.S.R.வெங்கட்ரமணா ஆகிய 29 உறுப்பினா்கள் அறிவுரைக்குழுவில் அங்கம் வகிக்கிறாா்கள்.

அமா் சேவா சங்கத்தின் நிா்வாகக் கமிட்டி சாா்பில் தற்போதைய தலைவா் திரு.S.ராமகிருஷ்ணனும், செயலா் திரு.S.சங்கரராமனும், திரு.S.R.S.Iyer அவா்களும் அறிவுரைக் குழுவில் அங்கம் வகிக்கிறாா்கள்.

2017-ஆம் ஆண்டில் வெள்ளி விழா கொண்டாடிய Handicare International 1992-ஆம் ஆண்டு திருமதி சுலோசனா கிருஷ்ணமூா்த்தி அவா்களால் கனடா தேசத்தில் பதிவு செய்யப்பட்டு, வருடந்தோறும் பல நிதி திரட்டும் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டு, சங்கத்தின் பல்வேறு செயல்பாடுகளுக்குப் பொருளாகவும், நிதியாகவும் வழங்கி வருவதோடு, வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் அங்குள்ள டிரஸ்டிகள், நன்கொடையாளா்கள், நலம் விரும்பிகள் சங்கத்தின் செயல்பாடுகளை நேரில் வந்து பாா்வையிட ஏற்பாடு செய்வதோடல்லாமல், அங்குள்ள ஒரு சில பல்கலைக்கழகங்களுக்குச் சங்கத்தை அறிமுகப்படுத்தி தொடா்ச்சியாக Physio Theraphy, Occupational Theraphy மற்றும் பல்வேறு பட்டப்படிப்புகளை மேற்கொள்ளும் கல்லூரி மாணாக்கா்களையும், பயிற்றுநா்களையும் ஓரிரண்டு மாதங்களுக்கொருமுறை சுழற்சி முறையில் அனுப்பி வைத்தும் உதவி வருகிறது.

2016, ஜுன் 17அன்று கைலாஷ் புனித யாத்திரை மேற்கொண்டிருக்கையில் கைலாச பதவியடைந்த Dr.T.N.கிருஷ்ணமூர்த்தி, திருமதி.சுலோசனா அவர்களின் கணவர். இவர் திரைக்குப் பின்னாலிருந்து HCI-ன் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு அளவிடமுடியாதது. இவரது பெயரால் **Dr.T.N.Krishnamurthy Center for Life Care**, கனடா HCI Intl., மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. திரு.திலிப் கிருஷ்ணமூர்த்தி, இவர்களின் மூத்த புதல்வர், Dr.தினேஷ் கிருஷ்ணமூர்த்தி இவர்களின் 2-வது புதல்வர், இவர்களும் மற்றும் குடும்பத்தினரும் சிறு வயது முதலே HCI-யின் வளர்ச்சியில், செயல்பாடுகளில், அங்குள்ள மாணாக்கர்களை இங்கு அனுப்பி வைப்பதில், கனடா தேசத்தின் அரசாங்க ஒத்துழைப்பு/நிதி பெறுவதில் மற்றும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதில் முக்கிய பங்காற்றி வருகிறார்கள். Late P.சங்கரன், HCI-யின் தலைவராக சிறிது காலம் பொறுப்பு வகித்த போது சங்கத்திற்கு வருகை புரிந்தார். திருமதி கீதா சங்கரன், அவர்களும் குடும்பத்தினரும் HCI-யின் வளர்ச்சியிலும், அமர் சேவா சங்கத்தின் செயல்பாடுகளிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். 2016-2017ல் சங்கத்தின் சக்கர நாற்காலி உபயோகிப்பாளர்கள் மற்றும் இதர மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் Paver Block நடைபாதை அமைத்துத் தந்துள்ளார்கள். திருமதி மீனா சுப்பையா அவர்களும் குடும்பத்தாரும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கத்திற்கு விஜயம் செய்து நமக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்து வருகிறார்கள். அதேபோல் HCI அன்பர்கள் பலரும் இந்தியா வரும்போதெல்லாம் அமர் சேவா சங்கத்திற்கு விஜயம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். இது வரை HCI நிறுவனத்திலிருந்து நமக்கு Rs.660.04 lakhs நன்கொடையாக வந்துள்ளது என்பது பாராட்டுதற்கும், போற்றுதற்குரியதாகும்.

இந்த HCI நிறுவனம் நமது பாரத தேசத்தின் மத்திய, மாநில அரசுகளாலும், Rotary, Lions போன்ற சமூக சேவை அமைப்புகளாலும், சென்னை, பெங்களூர் போன்ற நகரங்களில் சிறப்பான விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு அமர் சேவா சங்கத்தாலும் கௌரவிக்கப்பட வேண்டும் என்பது அடியேனது அவா.

திருமதி.மேரி கிரேஸ் சொருபராணி, தொடக்கக் கல்வி அலுவலர் செங்கோட்டை, திருமதி.சுலோசனா கிருஷ்ணமூர்த்தி தலைவர் HCI போன்றோர் முன்னிலையில் 23-2-2018 அன்று சிவசரஸ்வதி வித்யாலயா பள்ளியின் ஆண்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

Bangalore ITI பொது மேலாளராகவும், இயல், இசை, நாடகப்பிரியராகவும் திகழ்ந்த Late V.கிருஷ்ணன், Mumbai LIC மேலாண்மை இயக்குநராகவும், பெங்களூர் பாரதீய வித்யாபவன் உறுப்பினராகவும் திறம்பட செயல்பட்ட Late R.தோத்தாத்திரி தனது தலைமையில் இயங்கி வந்த கம்கலா மந்திரம் என்ற நிறுவனத்தை சங்கத்துடன் இணைத்து நிதியுதவி புரிந்த சென்னை பெரியவர் திரு.G.V.முத்துராம சர்மா, போன்றோர் சங்கத்திற்கு நிதி திரட்டுவதற்குப் பேருதவி புரிந்தனர். பொறியாளராகச் செயல்பட்டுக் கொண்டிருந்த நிலையில் தன் கண் பார்வை பாதிக்கப்பட்டபோதும் மனம் தளராமல் தன்னை ஜோதிடத் துறைக்கு மாற்றிக் கொண்டு உலகெங்கும் பல நாடுகளில் சொற்பொழிவுகள் ஆற்றி பிரபலமானவரும் 1995-1998 ஆம் ஆண்டுகளில் சங்கத்தின் நிதி நிலையை உயர்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டவருமான நமது அறிவுரைக் குழு உறுப்பினர் சென்னை திரு.K.நாராயணன் அவர்கள் 2017 டிசம்பரில் இறைவனடி சேர்ந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது **காலத்தினால் செய்த உதவி ஞாலத்தில் மானப்பெரிது** அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்வோமாக. அன்னாரது

துணைவியாரும் புதல்வர் Dr.N.விவேக் மற்றும் குடும்பத்தார் சென்னையிலும் மற்றொரு புதல்வர் திரு.N.வினோத் மற்றும் குடும்பத்தார் சிங்கப்பூரிலும் வசிக்கிறார்கள். திருமதி ராதா கிருஷ்ணன், திருமதி பிரேமா தோத்தாத்திரி திரு.M.சுவாமிநாதன் S/o Late G.V.M. சர்மா, திருமதி.லெட்சுமி K.நாராயணன் தொடர்ந்து சங்கத்திற்கு உதவி வருவது நாம் செய்த பாக்கியம்.

செயற்குழு உறுப்பினர்களான S.இராமகிருஷ்ணன், Dr.K.முருகையா, திரு.S.சங்கரராமன், திரு.விஸ்வநாதன் கணேசன், திருமதி.S.பட்டம்மாள், திரு.K.சிதம்பரம், திரு.T.பிரகாஷ், செல்வி.S.பத்மாவதி, திரு.P.S.கஸ்தூரிரங்கன், திரு.T.V.சுப்பிரமணியன், திரு.S.R.S.ஐயர் ஆகியோரும், இவர்கள் தவிர திரு.R.சிவசுப்பிரமணியன், திரு. S.வெங்கிடகிருஷ்ணன் திரு.M.ராமசுப்பிரமணியன், திரு.N.அழகப்பன், திருமதி.G.இராஜராஜேஸ்வரி, திரு.M.சுடலையாண்டி, திரு.C.ஸ்ரீசங்கர்ஷர்மா, திரு.S.அன்புரமேஷ், திரு.R.கிருஷ்ணமூர்த்தி, திரு.M.R.ஸ்ரீனிவாசன், திரு.A.S.நாராயணன், செல்வி.M.S.அருள்மொழி, திரு.S.S.கந்தசாமி, VOCS.சிதம்பரம், திரு.R.பாலசுப்ரமணியன் போன்றோரும் ஆக மொத்தம் 26 பேர் பொதுக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். பொதுக்குழு உறுப்பினர் Dr.S.சுந்தரவேலாயுதம் அவர்கள் மற்றும் அறிவுரைக்குழு உறுப்பினர் திரு.G.V.முத்துராம சர்மா அவர்கள், திரு.K.நாராயணன் அவர்கள் நிறைவாக வாழ்ந்து சமீபத்தில் இறைவனடி சேர்ந்தார்கள். இவர்கள் சங்கத்திற்கு ஆற்றிய நற்பணிகள் போற்றுதற்குரியது.

செயலாளர் திரு.S.சங்கரராமன் அவர்களின் திறமை, அனுபவம், அர்ப்பணிப்பு, சுறுசுறுப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு காந்தி கிராமப் பல்கலைக்கழகத்தில் Senate உறுப்பினராகவும், காந்தி கிராம் அறக்கட்டளையின் பொருளாளராகவும், சாந்தி காது கேளாதோர் பள்ளி, ஔவை ஆசிரமத்தின் தாளாளராகவும், பெங்களூரு CBR Forum அமைப்பின் Vice President ஆகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளது அனைவரும் அறிந்ததே. 17-11-2015-ஆம் தேதியிலிருந்து மத்திய அரசு பரிந்துரையின் பேரில் National Aluminium Company, Bhuvaneshwar, Orissa–வின் Independent Director-ஆகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளது அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும், சங்கத்திற்கும் மேலும் பெருமை சேர்க்கும் இனிய நிகழ்வு. எல்லாம் அவன் சித்தம். தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாரியத்திலும் (Welfare Board) உயர்மட்டக் குழுவிலும் (High Level Committee) திரு.S.சங்கரராமனும் நிபுணர் குழுவில் (Expert Committee) திரு.S.ராமகிருஷ்ணனும் உறுப்பினர்களாக செயல்பட்டு வருகிறார்கள். செயலாளர் திரு.S.சங்கரராமன் மற்றும் அவரது துணைவியார் திருமதி.ரமணி சங்கரராமன் இருவரும் தொடர்ந்து 15 ஆண்டுகளாக மும்பை மாரத்தான் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சாதனை படைத்து வருவது நாம் அனைவரும் அறிந்ததே.

03.12.2017 அன்று சென்னையில் நடைபெற்ற சென்னை மாரத்தான் போட்டியிலும், 27-05-2018 அன்று பெங்களூரில் நடைபெற்ற பெங்களூர் மாரத்தான் நிகழ்ச்சியிலும் நமது செயலர் மற்றும் குழுவினர் பங்கேற்று சங்கத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். வருடந்தோறும் இம்மூன்று மாரத்தான் போட்டிகளிலும் நமது செயலரும், நமது குழுவினரும் ஆங்காங்குள்ள தன்னார்வத் தொண்டர்களும், உறுப்பினர்களும் கலந்து கொண்டு சாதனை படைத்து வருகிறார்கள். செயலருக்கும், துணைவியாருக்கும் நமது

குழுவினருக்கும், மற்ற அன்பர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் உரித்தாக்குவோமாக.

மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பணி புரிந்து பணி நிறைவுபெற்றவரும், நமது சிவசரஸ்வதி வித்யாலயா பள்ளிகள் மற்றும் வளாகம், பொறியியல் துறைகளைத் திறம்படச் செயல்படுத்தி வருபவருமான நமது பொருளாளர் திருமதி.S.பட்டம்மாள் அவர்கள் ஆய்க்குடியைச் சார்ந்தவராதலால் அன்றாடம் சங்கத்திற்கு வருகை புரிகிறார். 24 மணி நேரமும் கூப்பிட்ட குரலுக்குச் செவி சாய்க்கிறார். தேவைப்படும் போதெல்லாம் பயணங்களும் மேற்கொள்கிறார்.

நமது உதவித் தலைவரும், சுரண்டை மஹாலெஷ்மி மருத்துவமனை நிறுவனருமான Dr.K.முருகையா, மே மாதம் 2007-லிருந்து வாரம் ஒருமுறை சங்கத்திற்கு வருகை புரிந்து Spinal Cord Injured Centre-ல் உள்ள அன்பர்களுக்குச் சிகிச்சையளித்து அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள், அறிவுரைகளை வழங்கி வருவதோடு, சங்கத்தில் தங்கிப் பயிலும் சிறார்கள் மற்றும் பயிற்சி பெறும் இளைஞர்கள், யுவதிகளுக்கும், தலைவர் மற்றும் செயலர் போன்றோருக்கும் பேருதவியாக இருந்து வருகிறார். தேவைப்படும் போதெல்லாம் தனது மஹாலெஷ்மி மருத்துவமனையில் சேர்த்து பொது சிகிச்சை, அறுவை சிகிச்சை போன்றவற்றையும் மேற்கொள்கிறார். மேலும் இவர், ரூபாய் 5லட்சம் செலவில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக Open Ground-ல் Stage கட்டித்தர முன்வந்துள்ளார். தனது வயதையும் பொருட்படுத்தாமல் கமிட்டி உறுப்பினர் திரு.K.சிதம்பரம் வாரம் 3 நாட்களாவது சங்க வளாகத்தை சுற்றிப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். நமது நிதிக்குழு உறுப்பினரும், The Amar Foundation அறங்காவலருமான திரு.T.பிரகாஷ் அவர்கள் சென்னையிலுள்ள தனது பல்வேறு முக்கிய அலுவல்களுக்கிடையே மாதந்தோறும் ஒரு வாரம் சங்கத்தில் தங்கி நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவ உறுதி பூண்டுள்ளார். சில நேரங்களில் சென்னை, காஞ்சிபுரத்திலேயே அவருக்கு வேலைப்பளு அதிகரித்து விடுகிறது. நமது முன்னாள் கமிட்டி உறுப்பினர் சென்னை திரு.R.பாலசுப்ரமணியன் அவர்கள் தனது உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுப் பயணங்களுக்கிடையேயும் நமக்கு தேவைப்படும்போதெல்லாம் நமது அழைப்பைத் தட்டாமல், அவ்வப்போது சங்கத்திற்கு வருகை தந்து சில தினங்கள் தங்கி சங்கத்தின் பல்வேறு செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து வந்ததோடு பல நல்ல உள்ளங்களையும் சங்கத்திற்கு அறிமுகப்படுத்தி வந்தார். பெருமளவில் நன்கொடையும் வழங்கி வருகிறார். 20 மாதங்கள் சிங்கப்பூரில் பணிபுரிந்துவிட்டு திரும்பியுள்ளார். நமது இணைச்செயலர் கல்லிடைகுறிச்சி/பெங்களூர் திரு.விஸ்வநாதன் கணேசன் ஆழ்வார்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி கல்லூரியில் P.U.C., B.Com. பயின்றவர். பின்னர் ACS C.A., முடித்த இவர் முடிந்த மட்டும் மாதந்தோறும் குறைந்த பட்சம் 10 நாட்களாவது சங்கத்தில் தங்கி கணினி மயமாக்கும் பணியையும், VBRI பணிகளையும் துரிதப்படுத்தி வருகிறார். நாம் உருவாக்கியுள்ள CSR Cell செயல்பாடுகளையும் ஊக்கப்படுத்தி வருகிறார். அவரும், அவரது உறவினர் சென்னை திரு.K.ராமலிங்கம் அவர்களும் மாரத்தான் நிகழ்ச்சிகள் வெற்றிக்காவும், சங்க வளாகத்தில் கட்டப்பட வேண்டிய கட்டடங்களின் Master Plan தயாரிப்பிலும் Container House, Megen Bed Theraphy போன்ற நவீன வசதிகளை அறிமுகப்படுத்துவதிலும் ஆர்வமாக உள்ளார்கள். நமது கமிட்டி உறுப்பினர் செல்வி S.பத்மாவதி அவ்வப்போது விடுப்பில் வந்து The Amar Foundation பணிகளை ஊக்குவிப்பதிலும், அதன் வரவு செலவுக் கணக்குகளை ஒருங்கிணைப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறார். நமது கமிட்டி உறுப்பினர் பெங்களூர் திரு.P.S.கஸ்தூாி ரங்கன் DRDA வில் Scientist-ஆக பணியாற்றி ஓய்வுபெற்றவர். அவர் மாதம் ஒருமுறை

சங்கத்திற்கு வந்து நமது வளாகத்தில் LED Lighting, Solar, Waste Management போன்ற திட்டங்களை அமல்படுத்துவதில் அக்கறை காட்டி வருகிறார். அது மட்டுமல்லாமல் இவரும், இவரது மைத்துனி திருமதி.ராதா சம்பத் அவர்களும் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் வண்ணம் சங்க வளாகத்தில் 18-வயதிற்கு மேற்பட்ட CPMR அன்பர்களுக்குத் தங்கும் வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையத்தை உருவாக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றார்.

முன்னாள் உதவித் தலைவர் திரு.M.R. ஸ்ரீனிவாசன் அவர்கள் கடந்த 28 ஆண்டுகளாக சங்கத்திற்கு வழிகாட்டியாக இருந்து கொண்டு அவ்வப்போது சங்கத்தில் தங்கிச் சேவையாற்றி வருகிறார். கடந்த சில மாதகாலமாக மருத்துவர் அறிவுரைப்படி ஓய்விலிருந்துவருகிறார். கடையநல்லூர் ஓய்வுபெற்ற தலைமையாசிரியரும், நமது சங்கத்தின் முன்னாள் இணைச் செயலாளருமான திரு.S.S.கந்தசாமி, Working Committee-நடவடிக்கைகளுக்கு உறுதுணையாகயிருந்து வந்தார். தற்பொழுது Working Committee செயல்பாட்டில் இல்லை என்பது கவனத்தில் கொள்ளவேண்டியது ஓர் அம்சம். பொதுக்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள். V.O.C.S.சிதம்பரம், S.அன்புரமேஷ், N.அழகப்பன், S.வெங்கிடகிருஷ்ணன், R.பாலசுப்பிரமணியன் போன்றோர் சென்னையில் தேவைப்படும் பணிகளுக்கு அவ்வப்போது உதவி வருகிறார்கள். திரு.R.சிவசுப்பிரமணியன், திரு.M.ராமசுப்பிரமணியன் திருமதி.G.இராஜராஜேஸ்வரி திரு.M.சுடலையாண்டி, திரு.C.ஸ்ரீசங்கர்சர்மா, திரு.R.கிருஷ்ணமூர்த்தி, திரு.A.S.நாராயணன், செல்வி.M.S.அருள்மொழி போன்றோர் வருடந்தோறும் நடைபெறும் நமது பொதுக்குழுக் கூட்டத்திற்கு வருகை தந்து தக்க ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி வருகிறார்கள். அறிவுரைக்குழு உறுப்பினர் திரு.S.R.S.ஐயர் அவர்கள் பொதுக்குழு உறுப்பினராகச் சேர்க்கப்பட்டு 30.01.2018 தேதியிலிருந்து செயற்குழு உறுப்பினராக பொறுப்புவகிக்கிறார். அவ்வப்போது சங்கத்தில் தங்கி நிர்வாகத்தை ஒருங்கிணைக்க முயற்சிகள் மேற்கொண்டுவருகிறார்.

அடியேனைப் பொருத்தமட்டில் சங்கத்திற்கு முக்கிய விருந்தினர்கள் வருகையின் போதும், விழாக்கள் நடைபெறும் போதும், செயற்குழு, பொதுக்குழு, அறிவுரைக்குழு கூட்டங்களின் போதும் பங்கேற்கிறோம். தேவைப்படும் போது உதவியாளர்களின் சௌகரியத்தை அனுசரித்து நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கோ, நிதி திரட்டுவதற்கோ வெளியூர் செல்வதுண்டு.

Finance Committee-ல் மொத்தம் 12 உறுப்பினர்கள். வருடம் இரண்டு முறை நடைபெறும் கூட்டங்களில் சங்கத்தின் Expenses மற்றும் பட்ஜெட் தொடர்பாக தங்களுடைய கருத்துகளையும், அறிவுரைகளையும் வழங்கி வருகிறார்கள். Gandhigram Trust திரு.K.சிவகுமார், Dhan Foundation திரு.M.கல்யாணசுந்தரம், Auditor J.V.ராமானுஜம் போன்றோரும் அறிவுரைக்குழு உறுப்பினர்கள் திரு.P.K.A.நாராயன், திரு.R.P.கிருஷ்ணமாச்சாரி, திரு.ராஜீவ் மேசேரி, செயற்குழு உறுப்பினர்கள் திரு.S.சங்கரராமன், திரு.T.பிரகாஷ், திருமதி.S.பட்டம்மாள், செல்வி.S.பத்மாவதி, திரு.T.V.சுப்பிரமணியன், ஆகியோரும் இக்குழுவில் பங்கு வகிக்கிறார்கள்.

2008-ஆம் ஆண்டிலிருந்து 2015-ஆம் ஆண்டு வரை சென்னை M/.s.J.V.Ramanujam & Co., நிறுவனத்தார் நமது Internal Auditors-ஆக செயல்பட்டார்கள். ஏப்ரல் 2015-

லிருந்து மதுரை ஆடிட்டர் Mr.G.Parthiban, B.Sc.,FCA.,DISA, Chartered Acountant அவர்களின் நிறுவனத்திடம் அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நமது வரவு செலவு கணக்குகளில் சில பகுதிகளைக் கவனிக்க 2013-ஆம் ஆண்டிலிருந்து கடையநல்லூர் M/s.Fathima & Associates நிறுவனத்தாரிடம் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 2015-ல் உடல் நலம் பாதிக்கப்பட்ட நமது கமிட்டி உறுப்பினரும் The Amar Foundation-ல் Managing Trustee-யுமான Dr.S.சுமதி அவர்கள் எதிர்பாராத விதமாக 26-04-2015 அன்று இறைவனடி சேர்ந்தது, சங்கத்தில் பயிற்சி பெற்ற, பெறுகின்ற DYTs, தங்கிப் பயின்று வந்த, வருகிற பள்ளிக் குழந்தைகள், அவர்களின் பெற்றோர்கள், IGNOU மற்றும் Alagappa University Extension Education, திட்டத்தின் கீழ் பயின்று வந்த, வருகிற மாணாக்கர்கள், The Amar Foundation சார்பாக செயல்பட்டு வரும் VTC மாணாக்கர்கள், Bramhos Block-ல் செயல்பட்டு வரும் Garments பிரிவு, தொழிற்பயிற்சி மையங்கள் மற்றும் சங்கத்தின் IBR, VBRI பிரிவுகளில் பணியாற்றும் அனைத்து அன்பர்கள், பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு நலம்விரும்பிகள், நன்கொடையாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள், நிர்வாகக்குழு, பொதுக்குழு, அறிவுரைக்குழு மற்றும் பல்வேறு குழுக்களின் அன்பர்கள் ஆகியோரையும் மற்றும் அன்னாரது குடும்பத்தாரையும் பேரதிர்ச்சிக்கு ஆளாக்கியது. அனைத்துத் தரப்பினரும் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை மேற்கொண்டார்கள். அன்னாரது இறுதிச் சடங்கில் நூற்றுக்கணக்கான அன்பர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியது அவர்மேல் பல்வேறு தரப்பினரும் கொண்டிருந்த அன்பிற்கும், பாசத்திற்கும், மதிப்பிற்கும், மரியாதைக்கும் எடுத்துக் காட்டாக அமைந்தது. 26-4-2018 அன்று அன்னாரின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி சங்கத்தைச் சார்ந்தவர்களால் ஒன்று கூடி அஞ்சலி செலுத்தப்பட்டது.

REC கட்டிடம் பல்வேறு கருத்தரங்கங்கள், கூட்டங்கள் மற்றும் விழாக்கள் நடத்த வசதியாக உள்ளது. சில தொண்டு நிறுவனங்களும் கட்டணம் செலுத்தி அவர்களது நிகழ்ச்சிகளை இக்கட்டிடத்தில் நடத்துகிறார்கள். Corporates அவர்களது கூட்டங்களை கட்டணம் செலுத்தி இந்த வசதியை பயன்படுத்திக் கொண்டால் சங்கத்தின் செயல்பாடுகளுக்கு பேருதவியாக அமையும். செங்கோட்டை-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் நமது சங்கத்திற்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 68 செண்ட் பரப்பளவுள்ள நிலத்தில் சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதில் செயல்படுத்தப்படவேண்டிய பணிகள் நல்லமுறையில் திட்டமிடப்படவேண்டும். 13-03-2014 அன்று சங்கத்தைப் பார்வையிடவும், REC கட்டிடத்தின் செயல்பாடுகளைக் கண்டறியவும் டெல்லி மற்றும் திருவனந்தபுரத்திலுள்ள Rural Electrification Corporation அதிகாரிகள் வருகைதந்தபோது மேலே குறிப்பிட்ட நமது கொடிக்குறிச்சி வளாகத்தையும் பார்வையிட்டு அங்கு கட்டப்படவிருக்கும் கட்டடங்களுக்கும் நிதியுதவி செய்ய முன்வருவதாகத் தெரிவித்துள்ளார்கள். சங்கத்தின் VBRI மற்றும் Early Intervention பணிகள் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டுவருவதால் Physiotherapists, Occupational Therapists, Speech Therapists, Special Educators, Nursing Staff, Care Givers போன்ற பணியிடங்களின் தேவை அதிகரிக்க வாய்ப்புள்ளதால், இதுபோன்ற பயிற்சிகளை அளிக்க கல்வி நிறுவனம் சங்கத்தின் சார்பில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற கருத்து நமது உறுப்பினர்கள் மற்றும் பணிபுரியும் அன்பர்களிடத்து நிலவி வருகிறது. அதற்காக சுமார் 25ஏக்கர் இடம் வாங்குவதற்கும், கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும், அன்றாடச் செலவுகளை

எதிர்கொள்வதற்கும், Plan, Estimate தயார் செய்வதற்கும், நிதி திரட்டுவதற்கும் போதுமான அளவு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

சென்னை Ln.R.P.கிருஷ்ணமாச்சாரி அவர்கள் சங்கத்திற்கு, வருடம் Rs.10 lakhs-ம், திரு.யக்ஞசுப்பிரமணியன், USA அவர்கள் Om Charitable Trust மூலமாக மாதம் Rs.5 lakhs-ம் (T.Amt.60 lakh-யும்) மன்னார்கோவில் திரு.கல்ராமன் அவர்கள் வருடந்தோறும் Rs.30 lakhs-க்கு குறையாமலும் வழங்கிவருகிறார்கள். திரு.கல்ராமன் அவர்களின் புதல்வி செல்வி மித்ரா ராமன் சிர.அமர் ராவ் அவர்களின் திருமண நிச்சயதார்த்தம் 02.07.2018 அன்று சென்னையில் சிறப்பாக நடந்தேறியது. இத்தம்பதியினரின் கல்யாண வைபவம் சீரும், சிறப்புமாக நடைபெறவும், அவர்களின் நீள் ஆயுள், நிறைசெல்வம், தேக ஆரோக்கியம், ஒளிமயமான எதிர்காலம் மற்றும் வளமான வாழ்விற்காகவும் பிரார்த்தித்துக் கொள்வோமாக. 2018-19 ஆம் ஆண்டிற்கு திரு.கல்ராமன் அவர்கள் Rs.1crore நன்கொடை வழங்கியிருப்பது நமது பணிகளைத் தொடர நம்பிக்கையையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கிறது. இதே போல் Vodafone நிறுவனம் சார்பில் புதுடெல்லியில் நவம்பர் 2016-ல் நடைபெற்ற Mobile for Good என்ற போட்டியில் அமர் சேவா சங்கத்திற்கு Health Category திட்டத்தின்கீழ் முதல் பரிசாக Rs.15lakhs அறிவிக்கப்பட்டு ஏப்ரல் 2017-ல் தொகை புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் நம்மால் பெறப்பட்டது. Spinal Cord Society London மற்றும் ISIC, New Delhi இணைந்து 2017-ஆம் ஆண்டு நவம்பர் 17, 18-ஆம் தேதிகளில் நடைபெற்ற கருத்தரங்கில் நமது Chief Physiotherapist திரு.P.ராமசுப்பிரமணியன் கலந்துகொண்டு Enabling Pressure Management Strategies through use of Pressure Mapping System and Localized sourced cushions என்ற தலைப்பில் சமர்ப்பித்த ஆய்வு கட்டுரைக்கு தங்கமடல் கிடைத்தது. அது மட்டுமல்லாமல் அக்டோபர் 2018-ல் ராமசுப்ரமணியன் கனடா தேசத்தில் சில மருத்துவமனைகளில் பயிற்சி எடுத்துக்கொள்ள சென்றுவருவதற்கான விமான கட்டணத்தை ஈடு செய்ய Rs.1.25Lakhs Cash Award-ம் வழங்கியுள்ளார்கள் என்ற நல்ல செய்தியினையும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

Oracle நிறுவனத்தின் சார்பில் வழங்கப்பட்டுள்ள ரூபாய் 54 லட்சம் நிதி உதவியின் துணை கொண்டு 18 வயதிற்கு மேற்பட்ட 305 மாற்றுத் திறனாளிகள் டில்லி RCI, IGNOU, Karaikudi Alagappa University, பெங்களூர் அம்பா, Amar Institute of Rehabilitation Science போன்ற நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, சான்றிதழ் படிப்பு (கைவினைப் பொருட்கள் தயாரித்தல், தையல் பயிற்சி, கணினி, செல்போன் சர்வீஸ், Home Appliances) ஆகியவற்றில் சேர்ந்து 2017-2018 நிதியாண்டில் பயன்பெற்றார்கள். 2018-2019-ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்பட நிதியுதவி கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2018 மே 21-லிருந்து 25-ஆம் தேதிவரை தென்ஆப்ரிக்கா Cape Town City-ல் World Federation of Occupational Therapist நடத்திய கருத்தரங்கிலும் திரு.P.ராமசுப்பிரமணியன் கலந்துகொண்டது Capturing Service Users Goal in Rural South India, Building sustainable partnership between Canada and India என்ற தலைப்புகளில் Poster Presentations செய்து பாராட்டு பெற்றது வரவேற்கத்தக்கது. இந்நிகழ்வில் நமது சங்கத்திற்கு ஏற்கனவே வருகை தந்து தன்னார்வத் தொண்டு புரிந்த கனடா தேசத்து பேராசிரியர்களும் பங்குபெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

VBRI Application-ஐ EI Project-ல் எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பற்றிய பயிற்சி தமிழ்நாடு அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் திரு.முருகையா IAS தலைமையில், 08.12.2016 அன்று மதுரையில் நடைபெற்றது. இவற்றில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில துணைக் கமிஷனர், 9 மாவட்டங்களிலிருந்து DDAWO அதிகாரிகள், சமூக நலத்துறை அதிகாரிகள், ஆகியோர் கலந்து கொண்டார்கள். நம்முடைய Rehab Team திரு.P.ராமசுப்பிரமணியன், திரு.S.அரவிந்த், திரு.M.சங்கர் சகாயராஜ் ஆகியோர் செயலர் திரு.எஸ்.சங்கரராமன் தலைமையில் கலந்து கொண்டார்கள். திரு.முருகையா IAS அவர்கள் மாரடைப்பு காரணமாக 11.04.2017 அன்று இறைவனடி சேர்ந்தது அவரது குடும்பத்தாருக்கும், நமக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கும் பேரிழப்பு. அக்கூட்டத்தின் தொடர்ச்சியாக மதுரை, திருமங்கலம் வட்டாரத்திலும், நாமக்கல் கபிலர் மலை வட்டாரத்திலும் Early Intervention Project-ன் Pilot Study-யினை தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் ஆணையம் அமர் சேவா சங்கம் மூலம் 01.02.2018 அன்று ஆரம்பித்து நடைபெற்றுவருகிறது. இத்திட்டம் 31.01.2019-ல் ஆய்வு செய்யப்பட்டு தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட வழிவகைசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. Dr.தினேஷ் கிருஷ்ணமூர்த்தி கனடாவிலிருந்தபடி இந்த GCC Project-ஐ வழிநடத்தி வருகிறார்.

சென்னை Dr.மாலதி ரமணி, Dr.தமிழ்செல்வி முயற்சியின்பேரில் சென்னையில் 23.04.2018 அன்று Government of India-ன் National Health Mission Tamilnadu Wing Director Mr.Darez Ahamed, IAS அவர்கள் தலைமையில் சென்னையில் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. அதில் அத்துறை அதிகாரிகளும் சங்கத்தின் சார்பில் செயலர் திரு.S.சங்கரராமன் தலைமையில் திரு.M.சங்கர் சகாயராஜ் மற்றும் திரு.S.அரவிந்த் ஆகியோர் கலந்துகொண்டனர். New Born Baby Screening, School Children Screening போன்றவற்றிற்கு இத்துறை உதவிகரமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேங்காக்கில் நடைபெற்ற கூடைப்பந்து விளையாட்டுப் போட்டியில் நமது சங்கப் பணியாளர் செல்வி பூவம்மாள் மற்றும் SCI திருநெல்வேலி லெட்சுமணன் இருவரும் கலந்துகொண்டார்கள். இதே போல் ஹைதராபாத்தில் நடைபெற்ற கூடைப்பந்து போட்டியில் நமது பணியாளர் செல்வி பூவம்மாளும் DYTS கனகலெட்சுமியும் கலந்துகொண்டு பாராட்டுப் பெற்றார்கள். சென்னையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பிப்ரவரி 2018-ல் நடத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பலதரப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் சங்கத்தின் பள்ளி மாணவ, மாணவிகள் பலதரப்பட்ட தொழற்பயிற்சிகள்பெறும் இளைஞர்கள், யுவதிகள் பங்குகொண்டு வழக்கம்போல் பல பரிசுகளைப் பெற்று வெற்றி வாகைசூடி வந்தார்கள். எல்லாம் அவன் செயல். 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கபட்ட கனவை கலையாதே என்ற குறும்படத்தில் நடித்த நமது ஹோம் குழந்தை T. இசக்கிமுத்து சிறந்த குழந்தை நட்சத்திரமாக பொள்ளாச்சயில் நடைபெற்ற குறும்படங்களுக்கான போட்டி தேர்வில் அறிவிக்கபட்டு விருது வழங்கப்பட்டான்.

சங்கத்தில் C.F.O –ஆகப் பணிபுரியும் திரு.S.ராஜேஸ்வரன் சிருங்கேரி ஸ்ரீசாரதா பீடத்திற்கு தனியாகவே இருமுறை சென்று ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா சன்னிதானம் மற்றும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சன்னிதானம் அவர்களை நேரில் தரிசித்து பள்ளிக் கட்டடம் குறித்த திட்டங்களை விளக்கிக்கூறி கட்டுமானத்திற்கான நிதியினை பெறுவதற்கு முயற்சி மேற்கொண்டதும்,

திரு.தீபக் ரவிலால் பல ஊர்களுக்கும் தனியே சென்று நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுவருவதும் பாராட்டுக்குரியது. இருவரும் Quadra-plegic என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களது உதவியாளர்களும் பாராட்டுக்குரியவர்கள். மக்கள் தொடர்புதுறையில் திரு.V.கல்யாணம் மற்றும் அன்பர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறார்கள்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற கூற்றிற்கிணங்க நமது செயலர் திரு.S.சங்கரராமன் மற்றும் அவரது குழுவினரும் துபாய், அபுதாபி போன்ற நாடுகளுக்கு ஒருவாரப்பயணமாகச் சென்றுவந்தனர்.

நமது சிவசரஸ்வதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மாணாக்கர்கள் வருடந்தோறும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுவருவது ஆசிரியப் பெருமக்களின் கடும்உழைப்பையும், மாணவச் செல்வங்களின் விடாமுயற்சியினையும் எடுத்துக்காட்டுகிறது.

Brohmas Vocational Training கட்டடத்திற்கு மேற்புறம் தையல் பிரிவு விரிவாக்கத்திற்காக கட்டப்பட்டுள்ள பட்டம்மாள் துரை Block VTC Extension Building திறப்பு விழா மற்றும் LED Project துவக்கவிழா 30.01.2017 அன்று நடைபெற்றது.

சென்னை திருமதி. சரோஜா ஸ்ரீகண்டன் அவர்கள் மேலப்பாவூர் கிராமத்தில் நன்கொடையாக வழங்கிய 25 சென்ட் காலி மனையில் நமது உறுப்பினர்கள் திருவாளர்கள் T.பிரகாஷ், R.பாலசுப்பிரமணியன் மற்றும் அவர் தம் குடும்பத்தார் வழங்கிய நன்கொடையினைக் கொண்டு Early Intervention திட்டத்தை செயல்படுத்துவதற்காக 27.07.2017 அன்று கட்டட அடிக்கல் நாட்டுவிழா நடத்தப்பட்டு கட்டட வேலை நிறைவு பெற்று 18.02.2018 அன்று திறப்பு விழா நடத்தப்பட்டது.

ஆய்க்குடி செங்கோட்டை சாலையில் State Bank of India உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி கிணற்றில் Redington நிதி உதவியுடன் Solar Pump பொருத்தப்பட்டதையடுத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த துவக்கவிழா நிகழ்ச்சியில், கடையநல்லூர் தாசில்தார் திரு.S.மாரியப்பன், சென்னை, Redington Foundation, Trustee திரு.M.முத்துகுமாரசாமி, Project Lead திருமதி.அனுராதா ஸ்ரீராம் மற்றும் திருமதி.C.சரோஜா AEE, TNEB, அனந்தபுரம் ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள்.

நமது கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.முகம்மது அபூபக்கர் அவர்கள் தானாகவே முன்வந்து சங்கத்தைப் பார்வையிட்டதோடு மட்டுமல்லாமல் சங்கம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரையாற்றும் போது அவரை ஆளாக்கிய சிற்பி, IUML Leader “Sirjul Millath Late AKA அப்துல் சமத் Ex.M.P. நினைவாக Hall ஒன்றை கட்டித் தர முன் வருவதாக அறிவித்தார். அவர் கூறியபடி சுமார் ரூ.10 இலட்சம் செலவில் 400 சதுர அடி பரப்பளவில் நமது அலுவலக கட்டடத்தின் விரிவாக்கத்திற்கான Hall ஒன்றை கட்டுவதற்கு 17-2-2018 அன்று அடிக்கல் நாட்டினார். கட்டட வேலை நடைபெற்று 16-9-2018 அன்று இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் முனீருல் மில்லத், பேராசிரியர் K.M.காதர் மொகிதீன் Ex.M.P அவர்கள், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் அப்துல் சமத் அவர்களுடைய

புதல்வர், திரு.A.அப்துல் வஹாப் மற்றும் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் இக்கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

சிவசரஸ்வதி வித்யாலயா உயர்நிலையிலிருந்து மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டிருப்பதால் அதற்கான வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பெங்களூர் ஓம் டிரஸ்ட் தர்மாத்மா திரு.யக்ஞசுப்பிரமணியன், சென்னை Tex Bio Science திரு.R.P.கிருஷ்ணமாச்சாரி, திரு.ஹரேந்திரன், முதன்மை அறங்காவலர், குஜலாம்பாள் அறக்கட்டளை பெங்களூர், சென்னை சாரதா செராமிக்ஸ் திரு.R.சத்தியவாகீஸ்வரன் மற்றும் சிலர் வழங்கிய நன்கொடையை கொண்டு கட்டுமானப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுவிழா 10.08.2015 அன்று திரு.R.P.கிருஷ்ணமாச்சாரி Captain Dr. பிஸ்வாகுமார் சென்னை S.சண்முகம், R.ஏகாம்பரம், India Cements, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்று, கட்டப்பட்ட அறைகள் திரு.G,K.ராமகிருஷ்ணன், குவைத் திரு.ரமேஷ் சேது ராமன் ஓம் டிரஸ்ட் திருமதி சுலோச்சனா கிருஷ்ணமூர்த்தி தலைவர் Handicare International Canada Haji MA யாசின் முகமத் CMD Yasin Group of Companies மதுரை திரு.S.ரவி சங்கர் General Manager Krishna Mines திருநெல்வேலி ஆகியோர் முன்னிலையில் 23.12.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

27/08/2017 அன்று மத்திய அரசின் சமூகப்பாதுகாப்பு அமைச்சகத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆணையர் Dr.கமலேஷ்குமார் பாண்டே, மும்பை General Insurance Corporation Ltd., உதவிப் பொது மேலாளர் திரு.நாம்தேவ் கதம், உதவி மேலாளர் அனிலா S. டிரிக்கி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டுவிழா மற்றும் 3.6.2017 அன்று தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீசாரதா பீடம், ஸ்ரீ சன்னிதானம் H.H. ஸ்ரீ விதுசேகரா பாரதி சுவாமிகள் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட விழா சிறப்பாக நடைபெற்றது. தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீசாரதா பீடம், General Insurance Corporation Ltd., Mumbai மற்றும் சிலர் வழங்கிய நன்கொடையினைக் கொண்டு கட்டப்பட்ட அறைகள் 14.05.2018 அன்று H.H. சுவாமி ஓம்கார நந்தா நிறுவனர் சுவாமி சித்பவா நந்தா ஆசிரமம் தேனீ, H.H.சுவாமி துக்காரம் கணபதி மகராஜ், வராஹரி சமஸ்தான் கடையநல்லூர், திரு.R.V. கிருஷ்ணன் President ஷேசாயி பேப்பர் and Board சிங்கம்பாறை திரு.ராமலு பொது மேலாளர் திரு.நாம்தேவ் கதம் உதவிப் பொது மேலாளர் General Insurance Corp Ltd., Mumbai ஆகியோர் முன்னிலையில் திறப்பு விழா நடத்தப்பட்டது. அவ்வமையம் சங்கரா தொலைகாட்சி அன்பர்கள் இந்நிகழ்வையும், சங்கச் செயல்பாடுகளையும் பதிவு செய்து கொண்டதோடு செயலர் திரு.S.சங்கரராமன் அவர்களையும் நேர்காணல் கண்டு ஒளிபரப்பினார்கள்.

நமது அன்பு வேண்டுகோளை உடனடியாக ஏற்றுக் கொண்டு இரண்டாவது Guest House கட்டடத்தை கட்டித் தர கோவில்பட்டி National Engineering College மற்றும் Lakshmi Ammal Polytechnic College – யின் Chariman திரு.K.ராமசாமி ஐயா அவர்கள் அடுத்த நாளே சங்கத்தைப் பார்வையிட்டு இடத்தை தேர்வு செய்து கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தது நாம் செய்த பெரும் பாக்கியம். இதற்கான அடிக்கல் நாட்டு விழா 4-9-2017 அன்று இனிதே நடந்தேறியது. அந்நிகழ்ச்சியில் ஐயாவுடைய மைத்துனர்கள் திரு.C.இராமசாமி திரு.C.சங்கரநாராயணன், கட்டிடப்பொறியாளர் திரு.ஜெயபால், கோவில்பட்டி, திரு.A.பாலசுப்பிரமணியன் திருமதி.ராஜலட்சுமி, சென்னை, திருமதி.தைலம்பாள்

ஸ்ரீனிவாசன் போன்றோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். வேலை நடைபெற்று 4-8-2018 அன்று கோவில்பட்டி பெரியவர் திரு.K.ராமசாமி ஐயா அவர்கள் மூத்த புதல்வர் திரு.K.R.கிருஷ்ணமூர்த்தி மைத்துனர் திரு.C.இராமசாமி, உறவினர் திரு.O.கந்தசாமி, மற்றும் Dr.மாலதி ரமணி, திரு.N.வெங்கட்ரமணி சென்னை முன்னிலையில் பால்காய்ச்சும் வைபவம் மற்றும் கணபதி ஹோமம் ஐயா அவர்களது குடும்பத்தினரின் ஆஸ்தான குரு திரு.ரகு சாஸ்திரிகள் அவர்களால் நடத்தப்பட்டது. சங்கத்திற்கு வருகை தந்திருந்த நலம் விரும்பிகளும், நன்கொடையாளர்களும், பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

நமது Adminstrative Office இயங்கி வரும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பிளாக்கிற்கு தென்புறம் பணிபுரியும் அன்பர்களின் வசதியை கருத்தில் கொண்டு Rest Rooms கட்டுவதென முடிவெடுக்கப்பட்டதையடுத்து கட்டட அடிக்கல் நாட்டு விழா 29-5-2017 அன்று நடைபெற்று வேலை நிறைவு பெற்றபின் 4-9-2017 அன்று திறப்பு விழா நடந்தேறியது. இக்கட்டத்திற்கு பெற்றோர் **திருமதி. சாரதாம்பாள், திரு. M.R.வைத்தியநாதன்** நினைவாக சென்னை மேற்கு மாம்பலம் திரு.V.ராமைய்யா குடும்பத்தினரும், திருவான்மியூர் Sqn.Ldr S.வாசுதேவன் அவர்களும் நிதியுதவி செய்துள்ளார்கள்.

3-7-2018 அன்று பரனூர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணபிரேமி மஹராஜ் அவர்கள் பக்தர்கள் புடை சூழ சங்கத்திற்கு வருகை தந்து வளாகம் முழுவதையும் பேட்டரி காரில் அமர்ந்து நிதானமாக சுற்றிப் பார்த்து குழந்தைகளையும், ஏனையோரையும் ஆசிர்வதித்தார்.

வேளுக்குடி ஸ்ரீ கிருஷ்ணன் சுவாமிகள் அவர்கள் சென்னையிலிருந்து சங்கத்திற்கு வருகைதந்து சங்கத்தில் உள்ள அனைவருக்கும் உபன்நியாசம் சொற்பொழிவு ஆற்றி விட்டு சென்றார்கள்.

சென்னை திரு.V.நடேசன் அவர்களின் தலைமையில் சிவனடியார்கள் பலர் நமது அமர் சேவா சங்கத்தின் அமர் விநாயகருக்கு 108 குடம் தண்ணீர் அபிஷேகம் செய்து மழை பெய்ய வேண்டி கூட்டு பிரார்த்தனை செய்தார்கள். திருவாசகம் ஓதினார்கள்.

தவத்திரு.திருமுருக கிருபாநந்த வாரியார் சுவாமிகள் அவர்களின் சிஷ்யை திருமதி.தேசமங்கையர்கரசி சங்கத்திற்கு வருகைதந்து சொற்பொழிவு ஆற்றினார்கள். இதற்கான ஏற்பாடுகளை திரு.V.கல்யாணம் செய்திருந்தார்.

வழக்கம்போல் இந்தாண்டும் நமது வளாகத்தில் சென்னை வாராஹி வாரவழிபாட்டு மன்றமும் அமர் சேவா சங்கமும் இணைந்து மூன்று நாட்களுக்கு நடத்தும் சதசண்டி யாகம் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1, 2 ஆகிய தேதிகளில் நடந்தேறியது. ஸ்ரீவாராஹி மைந்தன் சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். அமர் விநாயகருக்கு 54 மூலிகை பொடிகள்இ பழங்கள் கொண்டு அபிஷேகம் மேற்கொள்ளப்பட்டன. அடுத்த யாகம் 2019ம் ஆண்டு ஜுலை 5, 6, 7 தேதிகளில் நடைபெறும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டது.

அமெரிக்காவாழ் இந்தியர் Rtn.Dr.M.S.விஜயராகவன் அவர்கள் இந்திய நண்பர்கள் Dr.R.நாகேந்திரன், திரு.S.பாலசுப்பிரமணியம், திரு.R.ஜெயபிரகாசம் ஆகியோருடன் 16-9-2018 அன்று சங்கத்திற்கு விஜயம் செய்து Rotary District 3212 Service Project Chairman Dr.N.கோபாலகிருஷ்ணன் ராஜபாளையம் Rotary Club of Courtallam அன்பர், பெங்களூர் Rtn.ஜெயராமன் மற்றும் அமர் சேவா சங்க செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் Rotary International Matching Grant உதவியுடன் அமர் சேவா சங்க வளாகத்தில் சோலார் புராஜெக்ட் மேற்கொள்வது தொடர்பாக விரிவாக உரையாடினார். விரைவில் நல்லது நடக்குமென நம்புவோமாக.

வழக்கம்போல் நமது மறுவாழ்வுதிட்டத்திற்கு உதவும் வண்ணமும், பயிற்சிபெறும் நோக்கத்துடனும் கனடா யூனிவர்சிட்டிலிருந்து ஆக்குபேஷனல் தெரபி, பிஸியோ தெரபி மாணாக்கர்களும் ஓரிரு பேராசிரியர்களும் சுழற்சிமுறையில் வருவதுபோல் 26.07.2018 லிருந்து 23.08.2018 வரை Rtn.Prof.Sandra Impey, OT நமது வளாகத்தில் தங்கி அவர்களுடைய மாணாக்கர்களுக்கு பயிற்சியளித்ததோடு நமக்கும் அவ்வப்போது உதவிவந்தார். அவர் அந்த நாட்டின் ரோடேரியன் (Rotary Club of Grande Prairie Sunrise, District 5370, Canada, USA) என்பதையறிந்து குற்றாலத்திலுள்ள பல சுழற்கழகங்களின் ஒன்றான Rotary Club of Metro Elect-ன் உறுப்பினரான Rtn.Jothidar G. Madasamy Assistant Governor, District 3212, Joint Rotary Meet க்கு ஏற்பாடு செய்து அருகாமையிலுள்ள சில Rotary Club அன்பர்களையும் அழைத்து Col.Rtn.Selvanayagam Samsu, Chariman Youth Service, அவர்களது தலைமையில் 20.08.2018 அன்று Rtn.Prof.Sandra Impey, OT அவர்களுக்கும், அமர் சேவா சங்கத்திற்கும் Vocational Excellence விருது வழங்கிச்சிறப்பித்தார்கள்.

நமது சிவசரஸ்வதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்கள் பயன்பெறும் வண்ணம் Rotary District 3212 Immediate Past District Governor Dr.சின்னதுரை அப்துல்லா Smart Class க்கு தேவையான Laptop, LCD Projector போன்ற உபகரணங்களை நன்கொடையாக வழங்க முன்வந்து, Rotary Club of Courtallam Elect- ன் Rtn.Jothidar G. Madasamy Assistant Governor, District 3212, மற்றும் உறுப்பினர்கள் 11.07.2018 அன்று ஏற்பாடு செய்த கூட்டத்தில் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

ASHA for Education அமைப்பு சார்பில் 17.02.2018 அன்று நமது சங்கத்திற்கு Data 30seater four wheeler vehicle – 2 vans நன்கொடையாக வழங்கபட்டது.

பட்டுகோட்டையில் சங்கத்தின் well wisher திரு.M.S.ராஜேந்திரன் மிராசு 2 Ground (சுமார் 11 செண்ட்) காலிமனையை சங்கத்திற்கு நன்கொடையாக 04.07.2018 அன்று வழங்கியுள்ளார்.விரைவில் நமது VBRI ----- EI பணிகள் அப்பகுதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

Tirunelveli town, கரியமாணிக்கப் பெருமாள் கோவில் அக்ரகார தெருவிலுள்ள தங்களது குடும்பத்தாரின் காலிமனையுடன் சேர்ந்த ஒரு மாடி அமைந்துள்ள பூர்வீக வீட்டை சங்கத்திற்கு நன்கொடையாக வழங்க விரும்புவதாக மத்திய அரசு பணியில் முக்கிய அதிகாரியாக சென்னையில் பணிபுரியும் திரு. K. விஸ்வநாதன் அவர்கள்

22.08.2018 அன்று சங்கத்திற்கு வருகை தந்து நமது தலைவரையும் செயலரையும் நேரில் சந்தித்து தெரிவித்தார். நமது சங்க பணியாளர்கள் P. Selvaraj, V. Kalyanam, P. Muppudathi, P. Mari போன்றோர் திரு. K. விஸ்வநாதன் அவர்களுடன் நெல்லை சென்று இடத்தைப் பார்வையிட்டு அறைகளின் அளவுகளை குறித்து வந்தனார்.

கடையம் அக்ரகாரம் தெருவில் Dr. Sankaraiyer குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட 19 செண்ட் காலி மனையை அமர் சேவா சங்கத்திற்கு நன்கொடையாக வழங்க விரும்புவதாக அவரது குடும்பத்தைச் சார்ந்த திருமதி.விஜயலெட்சுமி தெரிவித்துள்ளார்.

காலஞ்சென்ற பித்துகுளி ஸ்ரீ திரு.முருகதாஸ் சுவாமிகள் அவர்களின் சீடர் பேராசிரியர் B.அனந்தராமன் அவர்கள் குழுவினரின் பஜனை கச்சேரி 21-11-2017 அன்று நடைபெற்றது. 10-12-2017 அன்று சென்னை திரு.சுப்பிரமணியன் அவர்கள் குடும்பதாருடன் கலந்து கொண்டு , 8-1-2018 அன்று சென்னை பஞ்சகரி யாத்ரா பஜனை குழுவினர், 15-1-2018 அன்று சென்னை திரு.பழனி வேலு அவர்கள் குழுவினர், 4-3-2018 சென்னை சபரி ராஜா குழுவினர் போன்றோர் ஏற்பாடு செய்த ஐயப்பன் பஜனை கச்சேரிகள், பூஜைகள் சங்க வளாகத்தில் வைத்து நடைபெற்றன.

25.10.2017 & 20.06.2018 தேதிகளில் வெளியான துக்ளக் இதழ்களில் அமர் சேவா சங்கம் பற்றிய செய்திகள் வெளிவந்துள்ளன.

வருடந்தோறும் நடைபெறும் நம்மிடம் பயிற்சி பெற்ற மாற்றுத் திறனாளர் இளைஞர் யுவதிகளுக்கான ஒன்று கூடும் விழா 2018-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15,16,17 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டார்கள். உபகரணங்கள் பழுது பார்த்து கொடுக்கப்பட்டன. கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

2018-ஆம் ஆண்டு ஜனவரி 23-முதல் 29-ம் தேதி வரை சென்னையில் நடைபெற்ற Hindu Spirtual Fare-ல் நமது Stall-ம் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. வருடந்தோறும் நடைபெறும் இந்நிகழ்வில் நாமும் தொடர்ந்து பங்கு கொள்கிறோம்.

நமது வளாகத்திலுள்ளோர் அனைவரையும் அனைத்து விலங்கினங்கள் ஜீவராசிகளையும் காத்து ரட்சிக்கும் ஸ்ரீ அமர் விநாயகர் கோவிலில் வருஷாபிஷேகம் 31-1-2018 அன்று சிறப்பாக நடைபெற்றது.

படப்பிடிப்பிற்காக பழைய குற்றாலாம் இசக்கி Resort-ல் முகாமிட்டிருந்த பிரபல தமிழ் நடிகர் திரு.சிவகார்த்திகேயன் அவர்களை திரு.V.கல்யாணம், திரு.S.ராஜேஸ்வரன் இருவரும் நேரில் சென்று அழைப்பு விடுத்ததை அடுத்து 12-2-2018 அன்று அன்னார் அமர் சேவா சங்கத்திற்கு வருகை புரிந்து நிதானமாக நமது வளாகம் முழுவதையும் சுற்றிப் பார்த்து சங்க அன்பர்களிடையே அனைவரையும் ஊக்கப்படுத்தும் வண்ணம் அரை மணி நேரத்திற்கு மேல் கலந்துரையாடி மீண்டும் சங்கத்திற்கு வருவதாக உறுதி கூறி விடைபெற்றது அனைவரையும் நெகிழச் செய்தது.

இந்திய ரயில்வே காவல்துறையின் உயர் அதிகாரி திரு.சைலேந்திர பாபு I.P.S. அவர்களை நமது PR Section திரு.V.கல்யாணம் ஓராண்டு காலமாக சங்கத்திற்கு வருகை தருமாறு தொடாந்து அழைப்பு விடுத்துக் கொண்டேயிருந்ததையடுத்து 22-5-

2018 அன்று அன்னார் சங்கத்திற்கு விஜயம் செய்து நமது குழந்தைகளுடன் மதிய உணவு அருந்தி எல்லா மாணாக்கர்களும் பங்கேற்ற கூட்டத்தில் அவர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் சிறப்பான உரை நிகழ்த்தியதோடு அவர்களின் சந்தேகங்களுக்கு பதில் வழங்கினார்.

நமது வளாகத்தில் வைத்து தென்காசி திருவள்ளுவர் கழகமும் அமர் சேவா சங்கமும் இணைந்து நடத்தும் திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டி 22-4-2018 அன்று நடைபெற்றது. ஆய்க்குடி திருவள்ளுவர் கழக அன்பர்களும் நமது பள்ளியின் ஆசிரியர்களும் இந்நிகழ்வினை உள்ளன்போடு நடத்திக் கொடுத்தார்கள். 2018 ஜூன் மாதம் நடைபெற்ற தென்காசி திருவள்ளுவர் கழக ஆண்டுவிழாவிலே இதற்கான பரிசுகள் வழங்கப்பட்டன.

28-6-2018 அன்று நமது சங்கப் பணியாளர்களின் ஒன்றுகூடும் விழா சீரும் சிறப்புமாக நடைந்தேறியது. பணிபுரியும் அன்பர்களின் குடும்பத்தாரும் இந்நிகழ்விலே பங்கேற்று சிறப்பித்தார்கள். பல போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன. ரோட்டரி இன்டர் நேஷனல் District 3212 Governor Rtn.K.ராஜகோபால் Dr.N.கோபால கிருஷ்ணன், District Grant Chairman, District 3212, Dr.K.Murugaiah, Rtn. Major.Selvanayagam Samsu, District Chairman Youth, District 3212, Tenkasi, Rtn.S.Jayaraman, Nayanajothi Trust, Bangalore, Sri.Shanmugasundram, Block Development Officer, Kizhapavoor, Sri.R.Balasubramanian, GB Member of ASSA மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

Schools, Home, Sangamam, குழந்தைகள், DYTs, சங்கப் பணியாளர்கள், நலம்விரும்பிகள் பங்கேற்ற காந்திஜெயந்தி விழாவையொட்டி வருடந்தோறும் நடைபெறும் அகண்டநாமம் நிகழ்ச்சி 1-10-2017 அன்று காலை தொடங்கி மறுநாள் காலை வரை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து திரு.G.சுந்தரராமன் தலைமை ஆசிரியர் கிருஷ்ணாபுரம் அவர்கள் உபன்யாசம் நடத்தினார்கள்.

Spinal Cord Injured Persons Get-together வழக்கம்போல் இந்தாண்டு ஆகஸ்ட் 4, 5, 6 தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. மருத்துவ முகாம் கலைநிகழ்ச்சிகள் விளையாட்டுப்போட்டிகள் என பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியின் தொடக்கநாளன்று குற்றாலத்தில் காவல்துறை பாதுகாப்புடன் பேரணியும், நடன நிகழ்ச்சியும் நடைபெற்றன.

Early Intervention திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் அவர்களின் பெற்றோரும் நான்கு பேருந்துகளில் கொடைக்கானலுக்கு ஒருநாள் சுற்றுலாவிற்கு அழைத்துச்செல்லப்பட்டது பாராட்டுதற்குரியது.

மாற்றுத்திறனாளர்கள் தினம் செங்கோட்டை, கடையநல்லூர், சங்கரன்கோவில், குருவிகுளம், ஆலங்குளம் போன்ற பகுதிகளில் அந்தந்த கூட்டமைப்பை வெவ்வேறு தினங்களில் நடத்தினார்கள். சங்கத்தின் செயலர் தலைவர் மற்றும் பணிபுரியும் அன்பர்கள் சிலர் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். அமர் சேவா சங்கத்தின் சார்பில் வருடந்தோறும் டிசம்பர் 3-ஆம் தேதி ஒவ்வொரு வட்டாரத்திலும் 3 அல்லது 4 இடங்களில் அமைக்கப்படும் விழிப்புணர்வு பூத்கள் கடும்மழையின் காரணமாக 10 நாட்கள் கழித்து ஏற்பாடு செய்யப்பட்டன.

15-8-2017 அன்று சுதந்திர தினவிழா நிகழ்ச்சி, 27-10-2017 அன்று ஆசிரியர் தினவிழா நிகழ்ச்சி, 14-11-2017 அன்று குழந்தைகள் தினவிழா நிகழ்ச்சி, 26-1-2018 அன்று குடியரசு தினவிழா நிகழ்ச்சி போன்றவை நடைபெற்றன.

5-6-2018 அன்று சர்வதேச சுற்றுப்புற சூழல் தினத்தையொட்டி விழிப்புணர்வு பேரணி, Exnora International Dr.G.S.விஜயலட்சுமி அவர்கள் தலைமையில் நமது சங்க வளாகத்தில் நடைபெற்றது. பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன.

11-6-2018 அன்று நடைபெற்ற பள்ளி இலக்கிய மன்ற விழாவில் இசைக்கவி ஸ்ரீரமணன் நாடக இயக்குநர் திரு.B.ராமன், நன்கொடையாளர் Ln.R.P.கிருஷ்ணமாச்சாரி, Exnora International Dr.G.S.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நமது சங்கத்தின் இல்லத்தில் தங்கி பயிலும் குழந்தை நட்சத்திரமான செல்வன் இசக்கிமுத்துவைப் பாராட்டினார்கள்.

சென்னை Rtn.N.வெங்கட்ரமணி Dr.மாலதி ரமணி, Ms.பர்வீன் அஸ்ரப், திரு.மார்த்தாண்ட பூபதி போன்றோர் நமது சங்கத்தில் பணிபுரியும் அன்பர்களுக்கு பயிற்சி அளிக்கும் வண்ணம் அவ்வப்போது ஊக்குவிப்பு பயிலரங்கங்களை நடத்தி உதவியுள்ளனர்.

பஞ்ச் குருகுலம் அன்பர்களின் அறங்காவலர் கூட்டம் நமது REC Corporate Hall-ல் நடைபெற்றபோது அதில் கலந்துகொள்ளும்பொருட்டு விருதுநகர் அறங்காவலர்களில் ஒருவரான விருதுநகர் இதயம் நல்லெண்ணெய் பங்குதாரர் திரு.முத்து அவர்கள் சங்கத்திற்கு விஜயம் செய்தார்கள். சங்கத்திற்குத் தேவையான நல்லெண்ணெய் குறித்த பட்டியல் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. விரைவில் ஆவன செய்வதாக வாக்களித்தார். பஞ்ச் குருகுல அன்பர்கள் மற்றும் குடும்பத்தினர் சுமார் நாற்பது பேர் பேராசிரியர் பஞ்சநாதன் அவர்கள் தலைமையில் ஆகஸ்ட் பத்திலிருந்து இருபதாம் தேதி வரை சங்கத்தில் இரண்டு Guest House களிலும் தங்கி நமது பள்ளி மாணாக்கர்கள், ஆசிரியர்கள் பயிற்சி பெறும் இளைங்கர்கள்,யுவதிகள் மற்றும் பணிபுரியும் அன்பர்களுக்கு பல்வேறு பயிற்சிகளை அளித்ததோடு, நன்கொடையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

சென்னை திரு.குரு அவர்கள் (News 18 – TV) சங்கத்திற்கு வருகை தந்து சங்கத்தின் நிகழ்வுகளையும் தலைவர் மற்றும் செயலாளர் அவர்களையும் நேர்காணலையும் பதிவு செய்து ஒளிபரப்பினார்கள்.

நெல்லை அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் குழுவினர் மற்றும் சென்னை Dr.மாலதி ரமணி, Dr.தமிழ்செல்வி மருத்துவ முகாம்களை நடத்தி உதவினார்கள்.

Dr.முகுல் அவர்களின் தலைமையில் 14 Staff அரவிந்த் கண் மருத்துவமனை & அமர் சேவா சங்கம் இணைந்து நடத்திய இலவச கண் மருத்துவ முகாமில் பங்கேற்றன.

சுலோசனா கார்டன்ஸ் வளாகம் மற்றும் கொடிக்குறிச்சி வளாகத்தில் வருகிற 10 ஆண்டுகளில் கட்டப்பட வேண்டிய பல்வேறு கட்டடங்கள் குறித்த Master Plan மற்றும் Project Proposal தயார் செய்வதற்கு நமது நலம்விரும்பி திரு.K.ராமலிங்கம் சென்னை அவர்கள் அறிமுகத்தின்பேரில் M/s.C.R.Narayana Rao (Consultants) Pvt.Ltd., Mylapore, Chennai நிறுவனத்தை அணுகி நான்கு சுற்று கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 31-3-2020-க்குள்ளாவது Master Plan தயாரிப்புப் பணி நிறைவடைய வேண்டும்.

மும்பை IOB Retd.Officer, திரு.A.கோபாலகிருஷ்ணன், திருமதி.புவனேஸ்வரி, டெல்லி திருமதி.ஹேமா கணேஷ், திருமதி.உஷா சங்கர் ஆகியோர் மும்பை, டெல்லியில் சங்கம் சார்பான பணிகளை அவ்வப்போது மேற்கொண்டு வருகிறார்கள். தென்காசி வக்கீல் திரு.M.மாரியப்பன் அவசரத் தேவைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

நமது கமிட்டி மற்றும் அறிவுரைக்குழு உறுப்பினருமான திரு.S.R.S.ஐயர் மற்றும் அவரது துணைவியார் திருமதி.சுப்புலெட்சுமி மற்றும் அன்பர்கள் 21.05.2018, 22.05.2018 அன்று திருவனந்தபுரத்தில் Get-togetherக்கு ஏற்பாடு செய்து செயலர் திரு.S.சங்கரராமன் அவர்களை கௌரவப்படுத்தி, நிதிதிரட்டிக்கொடுத்தது தலைவணங்குதற்குரிய நிகழ்வு.

நாமும், செயலரும், குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள், பணிபுரியும் அன்பர்கள் போன்றோர் அவ்வப்போது வெளியூர் செல்லும்போது தங்குவதற்கு இடம், பயணம் செய்வதற்கு ஊர்திகள் வசதி ஆகியவற்றை ஆங்காங்கே உள்ள அன்பர்கள் ஏற்படுத்தித் தருவது சௌகரியமாக இருக்கிறது. திருநெல்வேலியில் அரவிந்த் கண் மருத்துவமனை, Hotel Aryas, கண்ணா மாமி வீடு, சிவசைலத்தில் ஔவை ஆசிரமம், மதுரையில் Vikram Hospital, ஸ்ரீவில்லிபுத்தூரில் வனத்துறை ஓய்வு இல்லம், வாசுதேவநல்லூரில் தரணி சுகர் Guest House, சென்னையில் அடையார் திரு.T.R.ராஜகோபாலன்-சீதாலெட்சுமி இல்லம், வால்மீகி நகரில் திரு. லெட்சுமிநாராயணன் ஹேமா தம்பதியினரின் Flat, வடபழனியில் Tuff Tools திரு.T.ராஜகோபாலன்-அனுராதா அவர்கள் இல்லம், தாம்பரம் ஹிந்து மிஷன் ஆஸ்பத்திரி, உளுந்தூர்பேட்டை ஸ்ரீசாரதா ஆஸ்ரமம், திருச்சியில் GCT'ians 72 Association திரு.G.ஜெயபால் அவர்களது Flat, Hotel High Point, டெல்லியில் திருமதி.ஹேமா கணேஷ் இல்லம், மும்பையில் திரு.V.சங்கர், திரு.ஜெகதீஷ் அடப்பா, மும்பை SIES, மற்றும் திரு.R.குமார், திருவனந்தபுரத்தில் **திரு.** M.R. Ananthanarayanan போன்றோர் உதவியுடன் தங்கி மகிழ்ந்திருக்கிறோம்.

சேமநலநிதி, தொழிலாளர் அரசு காப்பீட்டுக்கழகம் (ESIC), இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம், தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, தபால், தொலைபேசி, போக்குவரத்து, வருவாய், கனிமம், பதிவு, காவல், நெடுஞ்சாலை மற்றும் மின்சாரம் போன்ற பல்வேறு மத்திய, மாநில அரசுத்துறைகள் சங்கத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்கி வருகின்றன.

சாம்பவர்வடகரை ஆரம்ப சுகாதார நிலையமும் அவ்வப்போது நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் சங்கத்தைப் பங்கேற்கச் செய்கிறது. வருடம் ஒருமுறை நமது

மேல்நிலைப்பள்ளி மாணாக்கர்களை இங்குள்ள மருத்துவக் குழு பரிசோதித்து தக்க அறிவுரைகளை வழங்கி வருகிறது.

நமது நலம் விரும்பிகள், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் இல்லத்து திருமண தம்பதிகளுக்கும், சமீபத்தில் திருமணம் செய்து கொண்ட நமது பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய வாழ்க்கைத் துணைக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து அவர்களது ஒளிமயமான எதிர்காலத்திற்காகப் பிரார்த்திப்போமாக.

**விருதுகள்**

26-5-2017 அன்று டெல்லியில் வைத்து நடைபெற்ற டாக்டர்.அம்பேத்கார் விருது (சமூக புரிந்துணர்வு மற்றும் பலவீனமான பிரிவு மேம்படுத்துதல்) ஜனாதிபதி பிரனாப்முகர்ஜி அவர்களால் வழங்கப்பட்டது. நமது செயலர் அவர்கள் இவ்விருதினை பெற்றுவந்தார்கள்.

6-4-2017 மும்பை மாராத்தான் 2017-க்கான அதிகமாக நிதி திரட்டிய ஜோடி விருது மற்றும் NGO விருது திரு.எஸ்.சங்கரராமன் அவர்களுக்கும், திருமதி. ரமணி சங்கரராமன் அவர்களுக்கும் United Way, Mumbai நிறுவனத்தால் விருதுகள் வழங்கப்பட்டது.

முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான செய்யும் சேவையைப் பாராட்டி New Delhi Spinal Cord Society Award 2017 – என்ற விருது 05.09.2017 அன்று வழங்கப்பட்டது. இவ்விருதினை நமது செயலர் அவர்கள் பெற்றுவந்தார்கள்.

ராஜ் டிவி அகடவிகடம் கவரேஜ் நிகழ்ச்சியின்போது நமது தலைவர்இ செயலருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. நமது சங்கத்தின் செயல்பாடுகளையும் ஓரளவிற்கு பதிவு செய்து, ஒளிபரப்பினார்கள். எல்லாம் அவன் செயல்.

மதுரையில் 07.01.2018 அன்று நடைபெற்ற First International Physiotheraphy Conference-யில் சங்க செயலாளர் திரு.S. சங்கரராமன் தலைமை விருந்தினராக் பங்கேற்று நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். விழா குழுவினர் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருந்து வழங்கிச் சிறப்பீத்தார்கள். நமது Physiotherapist திரு.M. Sankar Sahayaraj அவர்களுக்கு Civic Management Excellence Awardம் நமது Physiotherapists திருவாளர்கள் P. Ramasubramanian, S. Aravind Bharathwaj இருவருக்கும் Life Time Contribution Awardம் நமது Occupationaltherapist திருமதி. P. JeevaPriyatharshini, Special Educator திரு. P. Balamurugan இருவருக்கும் Young Achievement For Allied Professionals Awardம் இந்நிகழ்ச்சியில் வழங்கிச் சிறப்பீத்தார்கள். நமது Physiotherapist திருமதிகள். N. Subbulakshmi, Mental Health for Spinal Injured என்ற தலைப்பிலும் K. S. Shajitha Barvin Pressure Mapping என்ற தலைப்பிலும் கருத்தரங்கத்தில் உரையாற்றி சங்கத்திற்கு பெருமை சேர்த்தார்கள்.

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைகழகமும் சென்னை உதவி கரங்கள் அமைப்பும் சேர்ந்து 05.01.2018 அன்று இணைந்து நடத்திய International Conference on Achievement of and/or Innovation for the Specially Abled, நிகழ்ச்சியில்

செயலாளர் S. சங்கரராமன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தார்கள்.

**இரங்கல் செய்தி**:

நமது சங்கத்திற்கு மும்முறை விஜயம் செய்து அருளாசி வழங்கிச் சிறப்பித்த ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள், 28/02/2018 அன்றும், சென்னை மைலாப்பூர் தேசிகாச்சாரி சாலையில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் மடத்தைச் சார்ந்த ஸ்ரீரங்க ராமானுஜ தேசிகர் ஆண்டவர் சுவாமி 19/03/2018 அன்றும் சித்தி அடைந்தார்கள்.

திரு.R.S.நல்லபெருமாள் சென்னை அவர்களின் துணைவியார் திருமதி.மீனா October 3ம் தேதி அன்றும், டாக்டர் சுந்தரவேலாயுதம் G.B Member அவர்கள் தென்காசியில் வைத்து 11/10/17 அன்றும், ASSA Ex.Office Manager திரு.N.ஜெயராம் அவர்கள் சென்னை –யில் வைத்து 14/10/17 அன்றும், பெங்களூர் திரு.விஷ்வநாதன் கணேஷ் அவர்களின் நண்பரான திரு.இராமகிருஷ்ணன் என்ற ரமேஷ் கடையம் Differently Abled Person 26/10/17 அன்றும், திரு.R.முகுந்தா G.C.T.76 அவர்கள் சென்னையில் வைத்து 27/11/2017 அன்றும், நமது அறிவுரைக்குழு உறுப்பினர் Astrologer திரு.K.நாராயணன் அவர்கள் 22.03.2018 அன்றும், திரு.G.M.அருண் Ex.Dyts அவர்கள் சென்னை / திருவையாறில் வைத்து 05/12/17 அன்றும், திருமதி.சுப்புலட்சுமி BPT அவர்களின் தந்தை சாம்பவர்வடகரை 6/01/18 அன்றும், நமது முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் பாலன் ஸ்டூடியோ திரு.T.முருகேசன் அவர்கள் 15/01/18 அன்றும், திரு. பிரகாஷ் Sec.office அவர்கள் 26/01/18 அன்றும், திரு.கண்ணன் வாத்தியார் சாம்பர்வடகரை அவர்களின் தாயார் திருமதி.S.கோமதி 10/02/2018 அன்றும், எழுத்தாளர் சிவசங்கரி மாமியின் உதவியாளர் லலிதா 30/01/2018 அன்றும், திரு.R.P.நாயகம் பாம்பே ஸ்டோர் செங்கோட்டை, 24/02/2018 அன்றும், முகம்மது அரிஷ் ---- அன்றும், சங்கத்தின் முன்னாள் பணியாளர் பழனியப்பன் 16/03/2018 அன்றும், திரு.மாடசாமி & திரு.மாரியப்பன் (KB) அவர்களது தாயார் திருமதி.திருமலையம்மாள் 18/03/2018 அன்றும், காந்திகிராமம் M.R.இராஜகோபாலன் 17/03/2018 அன்றும், திரு.சுந்தர லெட்சுமணன் அவர்கள் தாயார் போல் பாவித்த திருமதி.N.செல்லம்மாள் அவர்கள் 02/04/2018 அன்றும், சென்னை வடபழனி V.வெங்கட்ராமன் 09/04/2018 அன்றும், திரு.அபுபக்கர் MLA அவர்களின் தந்தை காயல்பட்டினம் 23/04/2018 அன்றும், அமர் சேவா சங்கம் ஆரம்பகால பயிற்சி மையத்தில் நவம்பர் மாதத்தில் இருந்து பயிற்சி பெற்றுவந்த செங்கோட்டையை சேர்ந்த சிவ முகிலேஷ் என்ற 1½ வயது மாணவன் நிமோனியா சளி காரணத்தினால் கடந்த 16/06/2018 அன்றும், பாரதி யார் என்ற பிரபல நாடகத்தில் சுப்ரமண்ய சிவா பாத்திரத்தில் நடித்து வந்த திரு.ஹரன் அவர்கள் 04.07.2018 அன்றும் கமிட்டி உறுப்பினர் திருமதி.S.பத்மாவின் தாயார் திருமதி.சுசிலா ஸ்ரீனிவாசன் 18/09/2018 அன்றும், Dr.சூரிய நாராயணன் அவர்களுடைய தாயார் திருமதி.கோமதி சுப்பிரமணியம் அவர்கள் அம்பையில் 29/06/18 அன்றும், **முன்னாள் முதல்வர் டாக்டர் மு.கருணாநிதி** அவர்கள் 07/08/2018 அன்றும், **முன்னாள் பிரதமர் பாரதரத்னா அடல்பிஹாரி**

**வாஜ்பாய்** அவர்கள் 16/08/2018 அன்றும் இறைவன் திருவடி சேர்ந்தார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கேரளாவில் 11 மாவட்டங்களில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்கின் காரணமாக பலத்த பொருட்சேதங்களும் ஓரளவு உயிர் சேதங்களும் ஏற்பட்டன என்பது எல்லோரும் அறித்ததே. நமது செயலர் அவர்கள் சங்கத்தில் பணிபுரியும் அன்பர்கள் தங்களது ஒருநாள் ஊதியத்தை வெள்ள நிவாரணத்திற்காக வழங்கினார்கள். மாவட்ட ஆட்சியர் மூலம் இத்தொகை கேரளா முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

நிர்வாகக் குழு, பொதுக்குழு மற்றும் அறிவுரைக்குழு உறுப்பினர்கள் சங்கத்திற்கு முழு ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள். கடந்த 37 ஆண்டுகளில் சங்கத்தில் நடைபெற்ற நல்ல காரியங்களுக்கான பெருமை முன்னாள் மற்றும் தற்போதுள்ள 29 அன்பர்களைக் கொண்டஅறிவுரைக்குழு, 26 பேரைக் கொண்ட பொதுக்குழு, 11 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு, அயராது அல்லும் பகலும் பணிபுரிந்த, பணிபுரிந்து வருகின்ற அன்பர்களையும், தன்னார்வத் தொண்டர்களையும், அறிவுரை, ஆலோசனைகள் வழங்கி நம்மோடு இணைந்து செயல்பட்டு வரும் நிறுவனங்களையும், நலம்விரும்பிகளையும், நன்கொடையாளர்களையும், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி அன்பர்களையுமே சாரும். எல்லாவற்றிற்கும் மேலாக பகவானுடைய பரிபூரண அனுக்ரஹம் நமக்கு எப்பொழுதும் இருந்து வருகிறது.

நமது செயல்பாடுகள் சங்கத்திற்கு விஜயம் செய்யும் பல நல்ல உள்ளங்களாலும், நமது website-ஐ பார்வையிடும் சகோதர, சகோதரிகளாலும், பத்திரிகைகள், தொலைகாட்சிகள் போன்றவற்றில் நமது நிகழ்வுகளைக் காணும் அன்பர்களாலும் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது. செயலர், CSR Cell மக்கள் தொடர்பு பிரிவு மற்றும் The Amar Foundation நமது சங்கத்தின் நிதிநிலையை உயர்த்துவதில் காட்டும் விடாமுயற்சி, மேற்கொள்ளும் பல்வேறு திட்டங்கள் பல சமூக சேவை நிறுவனங்களுக்கும் வழிகாட்டியாக அமைகிறது.

பல நல்லிதயம் கொண்ட பெரியோர்களின் ஆசிகளாலும், ஆதரவினாலும், பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், தொழிலதிபர்கள், தனிநபர்கள் நன்கொடையாலும், உறுப்பினர்கள், பணியாளர்களின் இடைவிடாத உழைப்பினாலும் சங்கம் மேலும் பல சாதனைகளைப் படைக்கவும், சவால்விடப்பட்ட சகோதர, சகோதரிகளின் வாழ்க்கைத்தரம் மேம்படவும், சங்கப்பணியாளர்கள், நமது சேவையைப் பயன்படுத்திக் கொள்வோர், தன்னார்வத் தொண்டர்கள், உறுப்பினர்கள், நன்கொடையாளர்கள், நன்கொடை திரட்டி உதவுபவர்கள், இப்பகுதிவாழ் பொதுமக்கள் மற்றும் அனைவரும் தேக ஆரோக்கியத்தோடு, வளமான வாழ்வு பெறவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி பிரார்த்தித்துக் கொள்கிறோம். நமக்கெல்லாம் நல்லெண்ணங்களையும், தொலைநோக்குப் பார்வையினையும், திறமையினையும், குறிப்பாக தொண்டுள்ளத்தையும் மேன்மேலும் வழங்கி **Live To Serve** என்ற நமது வாசகத்தை, கொள்கையை அர்த்தமுள்ளதாக்க ஆண்டவன் என்றும் அருள்பாலிப்பாராக!!

நன்றி.

என்றும் இறைபணியில்,

எஸ்.ராமகிருஷ்ணன்
தலைவர்.

இடம்: ஆய்க்குடி.
நாள்: 22.09.2018

--------------